JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 4 Witness
for Prosecution

| CC.No. | 134/2025 | Crime No. | 45/2025 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw4- சந்திரசேகர்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 23.03.2026 | | | |

**Accused present. Adv. Mr.S.Thiruneelakandan present for Accused. APP present.**

**முதல் விசாரணை**

நான் மேட்டுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, யூனியன் அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2025 ஆம் தேதியன்று மாலை 03.00 மணி முதல் 4:00 மணிக்குள் நான் சன்னியாசிப்பட்டி பிரிவில் உள்ள எனது வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபொழுது மேட்டூரில் இருந்து பவானியை நோக்கி ஒரு இருசக்கர வாகனத்தில் பின்னால் ஒருவரை அமர வைத்துக்கொண்டு ஒருவர் ஓட்டிக்கொண்டு வந்தார். அப்போது பவானியில் இருந்து வந்த பைக் சன்னியாசிப்பட்டி பிரிவில் ரோட்டை கடக்கும்பொழுது மேட்டூரில் இருந்து பவானி நோக்கி வந்த பைக் சன்னியாசிப்பட்டி பிரிவில் ரோட்டை கடந்து கொண்டிருந்த பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. இரண்டு பைக்கிலும் இரண்டு இரண்டு நபர்கள் வந்தார்கள். விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபொழுது இரண்டு பைக்கில் வந்த நான்கு பேரும் கீழே விழுந்து இருந்தார்கள். அதில் சன்னியாசிப்பட்டி பிரிவு அருகில் ரோட்டை கடந்து சென்று கொண்டிருந்த பைக்கில் வந்தவர்களில் ஒருவருக்கு கால் உடைந்து இருந்தது. ஒருவர் மிகவும் சீரியசாக இருந்தார். பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் அடிப்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள நபர் தான் அன்றைய தினம் மேட்டூரில் இருந்து பவானியை நோக்கி பைக்கை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியவர் ஆவர். விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.23 18:31:03 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 20 அடி தான் இருக்கும். நான் விபத்தை நேரடியாக பார்த்தேன் என்றால், சரிதான். பவானியில் இருந்து மேட்டூர் செல்லும் சாலையில் சன்னியாசிப்பட்டிக்காக வலது புறம் திடீரென திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால், சரிதான். வலது பக்கம் திரும்பும்போது இண்டிகேட்டர் எதுவும் போடவில்லை என்றால், சரிதான். இந்த விபத்தானது வலது புறம் திரும்பிய நபரால்தான் ஏற்பட்டது என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.23 18:31:09 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani